
Registered as a Newspaper
பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 365
செவ்வாய்க்கிழமை
26 நவம்பர் 2024

முச்சந்தி முரளி



"எங்களை தலைநிமிர வைச்ச தலைமகனை வாழ்த்த வயதில்லை, வணங்குகிறோம்"



## புலிகளின் தலைவர் பிரபாகரனின் 70ஆவது அகவை இன்று!

### வல்வெட்டித்துறையில் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 26
விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளைபிரபாகரனின் 70ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம் வல்வெட்டித்துறையில் முன்னெடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
வல்வெட்டித்துறையில் அவரது இல்லம் அமைந்துள்ள பகுதியில் தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.கே.சிவாஜி 11

பெருந்தொகை பணம் கிடைத்துள்ளதாக

## பெண்ணொருவரிடம் ரூ.1,000,000 மோசடி

யாழ்ப்பாணம், நவ. 26
பெண்ணொருவரைத் தொலைபேசியில் அழைத்து, அதிஷ்டலாபத்தில் பெருந்தொகைப் பணம் கிடைத்திருப்பதாகத் தெரிவித்து 10 இலட்சம் ரூபா வரையில் 11

யாழ்ப்பாணத்தில்

## வெள்ளப் பேரிடரால் 7,416 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 26
யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பேரிடரால் இதுவரை 2 ஆயிரத்து 35 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 11

## அச்சுவேலியில் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 26
யாழ்ப்பாணம் - அச்சுவேலி பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து 51 பவுண் நகை 11

## வெள்ளப் பேரிடரில் வன்னிப் பெருநிலம்

முல்லைத்தீவு, நவம்பர் 26
வன்னியில் கடந்த 36 மணிநேரத்துக்கும் மேலாகப் பெய்துவரும் தொடர் மழை காரணமாக, பல இடங்களில் வெள்ளப் பேரிடர் நிலை ஏற்பட்டுள்ளது. பல்லாயிரம் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், இடப்பெயர்வையும் சந்திக்க நேர்ந்துள்ளது. 11

ஈ.பி.டி.பி.

## விலகினார் திலீபன்

யாழ்., நவ.26
ஈழமக்கள் ஜனநாயக் கட்சியில் இருந்து (ஈ.பி.டி.பி.) 11

## புயல் இன்று மாலைக்குள் இலங்கையை நெருங்கும்?

யாழ்ப்பாணம், நவ. 26
வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென் கிழக்காக உள்ள ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் வடக்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து வருகின்றது. இன்று மாலை 3 மணியளவில் இலங்கையை மிக நெருக்கமாக அண்மிக்கும் என்று யாழ்ப்பாணப் 11

ஐ.ம.ச. – ஐ.தே.க.

## ஒன்றிணைய வேண்டுமாயின் சஜித்துக்கு தலைமைப்பதவி

### நிபந்தனை விதிக்கிறார் ஹர்ஷன ராஜகருண

கொழும்பு, நவ. 26
ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட வேண்டுமாயின், தலைமைப் பதவி சஜித்துக்கு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.
ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் பேரெழுச்சியைத் தொடர்ந்து, கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் முன்னெடுத்து வருகின்றன. இரண்டு கட்சிகளையும் ஒன்றிணைப்பது 11

## உயர்தரப் பரீட்சை நேற்று ஆரம்பம்!

வவுனியா, நவ. 26
க.பொ.த. உயர்தரப் பரீட்சை நாடாளாவிய ரீதியில் நேற்று ஆரம்பித்துள்ளது. வடக்கு மாகாணத்தில் நிலவும் கடும் மழையுடனான காலநிலைக்கு மத்தியிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பரீட்சையில் கலந்துகொண்டனர். 11

## புயலின் வேகம் குறைந்தால் வடமாகாணத்துக்கு ஆபத்து!

யாழ்ப்பாணம், நவ. 26
வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென் கிழக்காக நகர்ந்துவரும் காற்றமுத்தத் தாழ்வுநிலை (புயலாக மாறுவதற்கு கூடுதல் சாத்தியம் உள்ள மண்டலம்) அதிக நேரம் கடற்பரப்பில் நிலைகொண்டாலோ அல்லது மிகவும் மெதுவாக நகர்ந்தாலோ இலங்கைக்கு ஆபத்துகள் அதிகம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.
பொதுவாக ஒரு புயல் கடலில் அதிகம் 11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் சேறடிப்புகளுக்கு நடவடிக்கை எடுக்கச் சட்டம்

## வலியுறுத்துகின்றார் நாமல்

கொழும்பு, நவ.26

அரசியலில் முன்வைக்கப்படும் போலிக்குற்றச்சாட்டுகளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கும்வகையில் புதிய சட்டம் இயற்றப்படவேண்டும். அதற்கான தனிநபர் பிரேரணையை நான் முன்வைக்கவுள்ளேன் என்று பொதுஜன பெரமுனவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மஹரகம பிரதேசத்தில் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசியல் களத்தில் தேர்தல் வெற்றிக்காக எவர் எதையும் குறிப்பிடலாம் என்ற நிலைமை காணப்படுகிறது. வரையறையற்ற வகையில் சேறு பூசல்கள் இடம்பெறுகின்றன. தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் முன்வைத்த குற்றச்சாட்டுகளை அனைவரும் மறந்துவிடுகின்றனர்.

குறுகிய அரசியல் வெற்றிக்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உட்பட ராஜபக்சக்கள் மீது பல போலியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இவ்வாறான குற்றச்சாட்டுகளால் மஹிந்த ராஜபக்ச நாட்டுக்கு ஆற்றிய சேவை மறக்கடிக்கப்பட்டு, அவப்பெயர் மாத்திரமே மிகுதியானது.

ராஜபக்சகள் மீதான போலியான குற்றச்சாட்டுகள் தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு பிரதான காரணியாகும். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பிரசார மேடைகளில் ராஜபக்சகள் மீது முன்வைத்த குற்றச்சாட்டுகளை ஆதாரபூர்வமாக நிரூபிக்கவேண்டும் என்று ஜனாதிபதியிடம் பலமுறை வலியுறுத்தியுள்ளேன்-என்றார். (எ-இ)

# பொருளாதாரமீட்சி செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மை வேண்டும்!

## சம்பிக்கவின் கோரிக்கை இது



கொழும்பு, நவ.26

**தேசிய மற்றும் சர்வதேச கடன்கள் அரசாங்கத்துக்குப் பெரும் சவாலாகும். பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்க வேண்டும். நாட்டின் நிதி நிலைமை தொடர்பாக மக்களுக்கு உண்மையை குறிப்பிட வேண்டும் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு நாட்டு மக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது. 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருதரப்புக் கடன் 28 பில்லியன் டொலராக காணப்பட்டது. உலக வங்கி, சர்வதேச நாணயநிதியம் உட்பட சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து 11 மில்லியன் டொலர் பல்தரப்பு கடன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நடைமுறை பொருளாதார சவால்கள் மற்றும் சர்வதேச நாணயநிதியத்தின் ஒப்பந்தத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதுடன், வாக்குறுதி வழங்கியதை போன்று நலன்புரி நடவடிக்கைகளை முன்னெடுப்பது அரசாங்கத்துக்கு சவால்மிக்கது. சர்வதேச நாணயநிதியத்துடன் கடந்த அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் தமது கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் திருத்தம் செய்யப்படும் என்று தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்கு தெரிவித்தது. இருப்பினும் ஒப்பந்தத்தில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தாமல், கடந்த அரசாங்கம் கடைப்பிடித்த பொருளாதார கொள்கைகளையே அரசாங்கம் பின்பற்றுகிறது - என்றார். (எ-இ)



# ஹரீஸ் இடைநிறுத்தம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று கட்சி அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியையும், கட்சித் தலைவரையும் விமர்சித்து கருத்து வெளியிட்டமையாலேயே அவர் கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். கட்சியின் செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் பதவி நீக்கம் தொடர்பான கடிதத்தை ஹரீஸுக்கு அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# ரணில் பணயக்கைதி இல்லை

கொழும்பு, நவ.26

தேசியப் பட்டியல் நியமனத்துக்கு ரவி கருணாநாயக்க நியமிக்கப்பட்ட விவகாரம் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரியாது. அதனாலேயே அவரின் நடவடிக்கை தொடர்பில் விசாரணை மேற்கொள்ள ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமித்துள்ளார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கட்சியில் யாரும் ரணில் விக்கிரமசிங்கவை பணயக்கைதியாக வைத்திருக்கவில்லை. அவ்வாறு அவரை யாராலும் பணயக்கைதியாக வைக்கவும் முடியாது. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவால் யாரை வேண்டுமானாலும் பணயக்கைதியாக வைத்திருக்க முடியும்.

இந்தவிவகாரத்தில் ரணில் விக்கிரமசிங்கவே முதலில் எதிர்ப்பை வெளியிட்டார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# அர்ச்சுனாவின் கருத்துகளுக்கு விளக்கம் கோரத் தீர்மானம்!

தமிழ் ஈழம் மற்றும் பிரபாகரன் தமிழர்களின் கடவுள் போன்ற கருத்துகளை வெளியிட்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், இராமநாதன் அர்ச்சுனாவிடம் அது தொடர்பில் விளக்கம் கோரப்படவுள்ளது.

அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது இது தொடர்பில் அவருடன் சபாநாயகர் கலந்துரையாடுவார் எனத் தெரியவருகின்றது. இந்த நாடாளுமன்ற உறுப்பினரின் அபிலாஷை என்னவென்பது எனக்கு தெரியாது. அது தொடர்பில் அவருடன் எதிர்காலத்தில் பேச்சு நடத்தப்படும். அவரின் (அர்ச்சுனா) முகநூல் மற்றும் யூடியூப் பதிவுகளை நாம் கண்காணித்தோம். அவருடன் வெளிப்படைதன்மையுடன் பேசலாம் என நம்புகின்றேன் என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார். அதேவேளை தனிப்பட்ட நபரின் அபிலாஷையைவிட அந்த நபர் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் அபிலாஷை என்னவென்பது எமக்கு தெரியும். மக்கள் அவ்வாறு எதிர்பார்க்கவில்லை. வடக்கு-கிழக்கு மற்றும் தெற்கு மக்கள் ஐக்கியமாக வாழவே விரும்புகின்றனர் எனவும் சபாநாயகர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-44)

# விபத்தில் குடும்பஸ்தர் இறப்பு: பெண் மருத்துவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், நவ. 26

வட்டுக்கோட்டையில் கடந்த மாதம் 29ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில், காயமடைந்த குடும்பத் தலைவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, விபத்துடன் தொடர்புடைய காரைச் செலுத்திவந்த பெண் கைது செய்யப்பட்ட நிலையில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியிலிருந்து சங்கரத்தை பக்கமாக 200 மீற்றர் தூரத்தில் பெண் மருத்துவரின் காரும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி இந்த விபத்து சம்பவித்திருந்தது. விபத்தில் படுகாயமடைந்த மகேஸ்வரன் ராம்தாஸ் (வயது-41) என்ற நபர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். அவர் கடந்த 20ஆம் திகதி சிகிச்சையின்போது உயிரிழந்தார். விபத்துடன் தொடர்புடைய மருத்துவர் கைது செய்யப்பட்ட நிலையில், அவருக்காக சட்டத்தரணி வி. சவீந்திரா நீதிமன்றத்தில் முன்னிலையாகி சமர்ப்பணங்களை முன் வைத்தார்.

இதையடுத்து விபத்துடன் தொடர்புடைய மருத்துவரை பிணையில் செல்லுமாறு நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

உதயனின் கடந்த 23ஆம் திகதிய பதிப்பில் அந்த மருத்துவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அவர் அன்றையதினமே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ம-10)

## வடக்கு மாகாண

# மாற்றுத் திறனாளிகளின் ஒன்றியத்தை இயக்குக!

யாழ்ப்பாணம், நவ. 26

வடக்கு மாகாணத்திலுள்ள மாற்றுத்திறனாளிகள் சங்கங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண மாற்றுத்திறனாளிகள் ஒன்றியத்தை மீள இயக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கண்சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் மலரவன், வவுனியாப் பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் வி. சுப்பிரமணியம் ஆகியோர் வடக்கு மாகாண ஆளுநரை நேற்றுத் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாணசபை இயங்கிய காலத்தில் உருவாக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் தொடர்பாகப் பேணப்பட்ட கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு வடக்கு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான குவிய மையத்தை உருவாக்குமாறும் அவர்கள் ஆளுநரிடம் கேட்டுக் கொண்டனர். இதனைச் சாதகமாக ஆராய்வதாக வடக்கு மாகாண ஆளுநர் உறுதியளித்தார். (ம-66)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# அதிகாரிகளை மலினப்படுத்தும் நோக்கம் எமக்குக் கிடையாது!

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, நவ.26
முன்னாள் ஜனாதிபதிகளைப் போன்று அதிகாரிகளை அச்சுறுத்தும் நோக்கமோ ஊடகவியலாளர்கள் முன்னிலையில் பொறுப்புக் கூறசெய்யவோ தமக்கு விருப்பமில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
நிதித் திட்டமிடல் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு அரச உத்தியோகத்தர்கள் அரசாங்கத்துடன் இணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-33-6)

# சுகாதாரத்துறையில் 14,000 வெற்றிடங்கள்

கொழும்பு, நவ.26
சுகாதாரத்துறையில் 14 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று தேசிய கணக்காய்வு அதிகாரசபை வெளியிட்டுள்ள அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டுள்ளது.
விசேட துறைகளில் தேர்ச்சி பெற்ற 58 மருத்துவ நிபுணர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்ற அதேவேளை 66 விசேட மருத்துவ நிபுணர்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. 95 ஆயிரத்து 948 பேர் கடமையாற்ற வேண்டிய சுகாதாரத் துறையில் 81 ஆயிரத்து 915 பேர் மாத்திரமே கடமையாற்றுகின்றனர். 50 மருத்துவமனைகளில் கடமையாற்றிய 226 மருத்துவ நிபுணர்கள் காணாமல்போயுள்ளனர். சில மருத்துவமனைகளில் விசேட மருத்துவ நிபுணர்கள் மேலதிகமாக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதாரத் துறையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தேசிய கணக்காய்வு அதிகாரசபை சுகாதார அமைச்சுக்கு பரிந்துரை செய்துள்ளது. (எ-33-6)

# வீடுகள் கோரும் 35 எம்.பி.க்கள்

கொழும்பு, நவ.26
35 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மெதிவெலவிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வீட்டுத்திட்டத்தில் தமக்கு வீடுகளை ஒதுக்கித்தர வேண்டும் என்று விண்ணப்பித்துள்ளனர்.
இந்த வீடுகளில் குடியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 4 ஆயிரம் ரூபாவை மாதாந்தம் வாடகையாகச் செலுத்தவேண்டும். அத்துடன் மின்கட்டணம், நீர்க் கட்டணம் போன்றவற்றையும் அவர்களே செலுத்த வேண்டும். இந்த வீட்டுத்திட்டம் கொழும்பு நகரிலிருந்து 40 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. (எ-33-6)

# நுளம்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை



கொழும்பு, நவ.26
க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறும் பரீட்சை நிலையங்களில் நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.
பரீட்சை நிலையங்களில் நுளம்பு மருந்து விசிறுவதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அனர்த்த முகாமைத் துவ நிலையமும் திடீர் அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில் தொடர்பு கொள்வதற்கு 117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தை அறிவித்துள்ளது. (எ-33-6)

# இடர் நிலையைக் கருத்திற்கொண்டு பனைகளைத் தறிப்பதற்கு அனுமதி!

யாழ்ப்பாணம், நவ. 26
புயலின் தாக்கத்தால் காற்றின் வேகம் அதிகரிக்கும் சாத்தியம் உள்ள நிலையில், பொதுமக்கள் ஆபத்தான நிலையில் உள்ள பனைகளைத் தறிப்பதற்கான பொறிமுறைகள் இலகுப்படுத்தப்பட்டுள்ளன என்று பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.
இதன்படி பொருத்தமான கிராம மட்ட அமைப்புகளின் சிபாரிசுகள் வழங்கப்படும் பட்சத்தில், பனைகளைத் தறிப்பதற்கான அனுமதியை வெறும் ஒரு மணிநேரத்தில் கண்டனங்கள் எதுவும் இல்லாமல் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
இந்த அனுமதியைப் பெறுவதற்காக பயனாளிகள் அலுவலகங்களுக்கு அலைய வேண்டிய அவசியம் இல்லை என்றும் ஆவணத்தின் பிரதியை slpdbho@yahoo.comஎன்ற மின்னஞ்சலுக்கோ அல்லது 077 232 1051 எனும் வட்ஸ் அப் செயலியூடாக அனுப்பி வைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# சுஜீவ சேனசிங்கவின் வாகனத்துக்கு பிணை

கொழும்பு, நவ.26
முன்னாள் அமைச்சர் சுஜீவ சேனசிங்கவிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொகுசு வாகனத்தை விடுவிக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்குக் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. 100 மில்லியன் ரூபா பிணை அடிப்படையில் சொகுசு வாகனத்தை மீள ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
சுஜீவ சேனசிங்கவுக்குச் சொந்தமான சொகுசு வாகனம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த சொகுசு வாகனம் நீதிமன்ற உத்தரவின் கீழ் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டிருந்தது. (எ-இ)



## தினம் தெரியுமோ?

என்னதான் எல்லா விசயத்தையும் பார்த்துப் பார்த்துப் பக்குவமாச் செய்தாலும், எல்லாரையும் உச்சிக்கொண்டு ஏதும் ஒரு சின்னக்குறை வரத்தான் செய்யும். அப்பிடித்தான், இப்ப பிரவேட் ஆஸ்பத்திரியளுக்கேசவால்விடுறமாதிரிமுன்னேறிக்கொண்டிருக்கிற யாழ்ப்பாணம், பெரியாஸ்பத்திரிக்கு கண்ணூறு கழிக்கிறமாதிரி ஒரு குறையொண்டு கனநாளா இருக்குது. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில இருந்த பிள்ளைபேறு வார்ட்டை, 2012 ஆம் ஆண்டு புதுக்கட்டடம் கட்டுறதுக்காக இடிக்கேக்க,வேற ஒரு இடத்துக்கு மாத்தினவை.அப்பிடி தற்காலிகமா மாத்தின இடத்திலதான் இன்னும் அந்த வார்ட் இயங்கிக்கொண்டிருக்குது. ஆத்திர அவசரத்துக்கு மாத்தின இடமெண்டதால பிள்ளைபேறுக்குரிய எல்லா வசதியும் அங்க இருக்காதுதானே. கொஞ்ச நாளைக்கு இப்பிடி வசதியீனத்தோட இயங்கினால் அது பல்லைக்கடிச்சுக்கொண்டு சமாளிக்கலாம். ஆனால் கிட்டத்தட்ட 12 வருசத்துக்கும் மேல அப்பிடி இயங்கிறது சரியில்லைத்தானே.

இப்ப அந்த வார்ட் இயங்கிற இடத்தில கனக்க வசதிக்குறைபாடுகள் எண்டு சனங்கள் சொல்லுகினம். முக்கியமான பிரச்சினை கட்டில் பற்றாக்குறையா இருக்கிறதுதான். அங்க போற ஆக்களுக்கு ஏத்தளவுக்கு கட்டில்கள் இல்லாததால கனபேர் கீழதான் பாய் போட்டு இருக்கோணும். சிலவேளை அப்பிடி பாய்போட்டு கூட இருக்கேலாதளவுக்கு கீழயும் இடமில்லாமல் போடுமாம். இப்பிடி இடப்பிரச்சினை இருக்கிறதால கொழும்பு ஆஸ்பத்திரி, பிரைவேட் ஆஸ்பத்திரியளில் இருக்கிறமாதிரி பிறந்த குழந்தையளை தனித் தொட்டிலுக்க வளர்த்தி படுக்க வைக்கேலாது. ஏனெண்டால் ஆக்களுக்கே இடமில்லையெண்டால் பிறகெப்பிடி தொட்டிலை வைக்கிறது? அதால தாய்மார் படுத்திருக்கிற கட்டிலிலதான் பிள்ளையளையும் சேர்த்து படுக்க வைக்கவேண்டியிருக்காம். அதைவிட பிள்ளைபேறுக்கெண்டு தனி ஒப்பிரேசன் தியேட்டர் இஞ்ச இல்லை. அப்பிடியொரு சிக்கல் இருக்கிறதால, அவசரமாச் செய்யவேண்டிய 'சிசேரியனுக்கு' கூட கனநேரம் காவலிருக்கவேண்டியிருக்காம். இதை விடவும் கனக்கப் பிரச்சினையள் இருக்கெண்டு சொல்லுகினம். இதுக்கெல்லாம் ஒரே தீர்வு, எல்லா வசதியளோடையும், நல்ல விட்டுவீதியா புதுசா ஒரு பிள்ளைப்பேறு வார்ட் கட்டுறதுதான்.

இப்ப பெரியாஸ்பத்திரிக்கு பொறுப்பா இருக்கிற பணிப்பாளர், வருத்தக்காரரும், அவையைப் பாக்கவாறவையும் கஷ்டப்படக்கூடாது எண்டு பார்த்து பார்த்து ஒவ்வொண்டா செய்துகொண்டிருக்கிறார். அவர் பதவியேற்ற பிறகு பெரியாஸ்பத்திரி முன்னேறினளவுக்கு வேற எந்த ஆஸ்பத்திரியும் இப்பிடி வளரேலை. முந்தியெல்லாம் தொட்டதுக்கும் பிரைவேட் ஆஸ்பத்திரிக்குப் போனவை எல்லாரும் இப்ப பெரியாஸ்பத்திரிக்கு வந்து, நேரகாலத்தோட தங்கட வருத்தத்தைக் காட்டி, மருந்து எடுத்துக் கொண்டு போற அளவுக்கு நிலைமை மாறியிருக் குது. அப்பிடி எல்லாத்தையும் செய்யிற பணிப்பாளர், பிள்ளைப் பேறு வார்ட்டையும் எல்லாவசதியோடையும் செய்து குடுக்கோணுமெண்டதுதான் சனத்தின்ரயும், பட்சியின்ரையும் எதிர்பார்ப்பு.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளநீரை அகற்றக் கோரி மன்னாரில் மக்கள் போராட்டம்



**மன்னார், நவ.26**

**மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் துள்ளுக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பாவிலுப்பட்டான் குடியிருப்பு கிராம மக்கள் தமது கிராமத்தில் தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்றக்கோரி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**

இந்தப் போராட்டம் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியை மறித்து இடம்பெற்றது. கிராமத்துக்குச் செல்லும் வீதியில் அமைப்பதற்காக மதகு கொண்டு வரப்பட்டு 4 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் அதைச் சரியான முறையில் பொருத்தவில்லை என்று கிராம மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அந்த நடவடிக்கையை உரியவாறு முன்னெடுத்திருந்தால் வெள்ள நீர் கிராமத்தில் தேங்காது என்று சுட்டிக் காட்டியுள்ள கிராம மக்கள், அதை உனடியாகச் சரியான முறையில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

மக்களின் போராட்டத்தை அடுத்து தலைமன்னார் பொலிஸார் மற்றும் கிராம அலுவலர் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடினர். இந்தப் பிரச்சினை தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்று துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அவர்கள் உறுதியளித்ததை அடுத்து மக்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

மதகை உரிய முறையில் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-33-56)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ.26

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் -30 தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் 29ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடத்தப்படும் நிகழ்வில் மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தைத் தொடர்ந்து சைவப்புலவர் , பிரசங்க பூஷணம் கந்த. சத்தியதாசன் 'மாணிக்கவாசகரும் திருக்கழுக்குன்றப்பதிகமும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். அதிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப் படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

✣✣✣✣✣✣

யாழ்ப்பாணம், நவ.26

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண தொடர் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி.தயாநாதனும், சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர், பிரசங்க பூஷணம் க.கைலநாதனும், 'காம தகனப் படலம்' எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவும், அதிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாச பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

✣✣✣✣✣✣

யாழ்ப்பாணம், நவ.26

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 33 சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ.த.குமரன் 'மாணிக்க வாசகரும் குழைத்தபத்தும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். அதிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆறுமுகநாவலர் குருபூஜை நிகழ்வு வேதாந்தமடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட எட்டாவது குருபீடாதிபதி ஸ்ரீ வேத வித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் தலைமையில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (எ-ரி)



# நாவலர் குருபூசை

சாவகச்சேரி, நவ. 26

கைதடி கிழக்கு சனசமூக நிலைய இந்து வாலிபர் சங்கத்தால் 'ஒரு வருடம் ஒரு வித்தியாலயம்' எனும் தொனிப் பொருளில் முன்னெடுக்கப்படும் நாவலர் குருபூசை நிகழ்வு, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் வலிகாமம் வலய சைவசமய பாட ஆசிரிய ஆலோசகர் சைவ சித்தாந்த பண்டிதர் கந்த.சத்தியதாஸன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். சொற்பொழிவில் கேள்விகளுக்கு சரியான விடையளித்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (எ-ரி-159)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வெளியிடங்களுக்குச் செல்லும்போது உணவு, தண்ணீர் விஷயத்தில் அலட்சியம் காட்டவேண்டாம்.

**இடபம்:** குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.. தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும்.அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக் கூடும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக் கூடும்.

**சிம்மம் :** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக அமையும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடு வீர்கள். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**துலாம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. வெளியூர்ப் பயணங்களைத் தவிர்த்துவிடவும். பிற்பகலுக்கு மேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், உரிய சிகிச்சையினால் உடனே சரியாகி விடும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக் கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## இடரை எதிர்கொள்ளும் பாலபாடம்

வங்கக் கடலில் அந்தமான் தீவுக்கு அருகாக ஏற்பட்டிருந்த வலுப்பெறலாம் என்று எதிர்வுகூறப்பட்டிருந்த புயல் வடக்கின் கடற்பகுதியை அண்மித்துப் பயணப்பட்டிருக்கின்றது. ஆனால், புயல் வருமா, வராதா என்பது தொடர்பிலும் அதன் பயணப் பாதை தொடர்பிலும் போதிய தெளிவும் புரிதலும் மக்களிடத்தில் உள்ளதா என்று கேட்டால், 'இல்லை' என்பதுதான் பதிலாக அமையும்.

தாழமுக்கம் ஒன்று வலுப்பெற்று அது புயலாக மாற்றம் பெற்றால், அதை எதிர்கொள்வதற்குப் போதிய தெளிவூட்டல்கள் மக்களைச் சென்றடையும் வகையில் வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். புயலையும், அதனால் ஏற்படக்கூடிய சேதங்களையும் எதிர்கொள்ளும் வகையில் மக்கள் அறிவுறுத்தப்படவேண்டும். ஆபத்தான வகையில் உள்ள மரங்களின் கிளைகளை வெட்டி அகற்றுதல் முதல் உலருணவுப் பொருள்களை இருப்பில் பேணுவது வரை இந்தப் பட்டியல் நீட்சியானது. ஆனால், 'மேய்ப்பனின் கோலை மறந்த ஆடுகள்போல்' தான் மக்கள் விடப்பட்டுள்ளனர் என்பதே உண்மை. வானிலை முன்னறிவிப்பு நடவடிக்கைகள் இம்முறை மேற்கொள்ளப்படவேயில்லை என்று கூறிவிட முடியாது. ஆனால், அந்த நடவடிக்கைகள் அனைவருக்கும் பொதுவானவையாக இல்லை என்பது பெருங்குறை. இலத்திரனியல் ஊடகங்களை சமூக ஊடகங்களைமையப்படுத்தித்தான் பெரும்பாலான செயற்றிட்டங்கள் அமைந்தன. திறன்பேசிகள் இல்லாத பலநூறு குடும்பங்கள் இன்னும் உள்ளன. எனவே, இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு மக்களை இலகுவில் ஒன்றிணைக்கக்கூடிய வகையில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்தான் ஆக்கபூர்வமானதாகவும் காலத்தேவையானதாகவும் இருக்கும். இது டிஜிட்டல் உலகம்தான். அதற்காக அனைத்து விடயங்களுக்கும் டிஜிட்டல் மயம் என்ற போர்வையைப் போர்த்திவிட முடியாது.

இலங்கை - தமிழகம் - அந்தமான் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட நீள்முக்கோண வலயத்துக்குள் இந்த வருடத்தில் மாத்திரம் 200க்கும் மேற்பட்ட தீவிர வானிலை நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளதாக தமிழகத் தகவல்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன. தமிழகத்துக்கு ஏற்படும் காலநிலைப் பாதிப்புகள் இலங்கையையும் தாக்கவே செய்யும். இதில் தமிழகம் வேறு, இலங்கை வேறு என்றில்லை. ஆனால், இந்த 200க்கும் மேற்பட்ட நிகழ்வுகளில் ஒன்றில்கூட பொதுமக்கள் ஆழமாக விழிப்புணர்வூட்டப்படவில்லை என்பது கசப்பான உண்மை மட்டுமல்ல, அபத்தமானதும்கூட.

மிகச் சிறிய நாடாக இலங்கை, வங்கக் கடல் காற்றழுத்தத்துக்கு வருடாவருடம் உட்படுகின்ற போதிலும், அதன் தீவிரத் தாக்கங்களை தன்னில் வாங்கிக் கொள்வது மிகக்குறைவு. தமிழ்நாடு, ஒடிசா, மேற்கு வங்கம் இவைதான் அனேகமாக காற்றழுத்தத் தாழ்வுநிலைகளின் பிரதான பலிக்கடா. உண்மையில் இலங்கைக்கு இதுவொரு வரம். அதற்காக நாம் அசட்டுத் தைரியத்துடன் இருந்துவிட முடியாது. இலங்கை - தமிழகம் - அந்தமான் பகுதிகளுக்கு இடையில் ஏற்படும் காற்றழுத்தத் தாழ்வுநிலையை எதிர்கொள்வதற்குக் கண்காணிப்புகளைப் பலப்படுத்துவதுடன், கூட்டுச் செயற்றிட்டங்களை உருவாக்க வேண்டும். புயல் வராமலும் விடக்கூடும். ஆனால் வருமென்ற எதிர்பார்ப்போடு முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதால் எவ்வித நட்டமும் இல்லையே. பாதிப்பு ஏற்பட்ட பின்னர் கைகொடுப்பதை விடவும், பாதிப்பு ஏற்படாமல் தவிர்ப்பதே இயற்கை இடரை எதிர்கொள்வதற்கான பாலபாடம்.




# வியாழன் கூடுகின்றது தேர்தல் ஆணைக்குழு!

### உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் ஆராயும்

**கொழும்பு, நவ.26**

**தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்வரும் வியாழக்கிழமை 10 மணிக்கு கூடவுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் தொடர்பில் நீதிமன்றத்தின் தீர்ப்புக் காரணமாக, தேர்தலை விரைவாக நடத்துவது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.**

தேர்தலை நடத்துவதற்கு இதுவரை நிதி ஒதுக்கப்படவில்லை எனவும், இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் டிசெம்பர் மாதம் அரசாங்கத்தால் முன்வைக்கப்படவுள்ள இடைக்கால நியமக் கணக்கின் ஊடாக இதற்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடத்தப்படும் என அண்மையில் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார். (எ-இ)

## எம்.பி.க்களுக்கு வாகனம்; இறுதித்தீர்மானம் இல்லை

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் சிக்கன எரிபொருள் வாகனங்கள் வழங்கப்படும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்த கூற்றை சபாநாயகர் அஷோக ரன்வெல மறுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கான வாகனங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் இன்னமும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-6)



## முட்டை விலை உயர்வு

கொழும்பு, நவ.26

முட்டை விலை மீண்டும் உயர்ந்துள்ளது என்று நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர். 35 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை தற்போது சந்தையில் வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றது என்று கூறப்படுகின்றது. (எ-இ)

## செயலாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், நவ.26

வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலராக ஆ.சிறி, வடக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை அந்தப் பதவியில் சேவையாற்றிய ம.ஜெகூ வடக்கு மாகாண பேரவையின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-125)

## சுகாதார அமைச்சுக்கு பதில் செயலாளர் நியமனம்

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றிய வத்சலா பிரியதர்ஷனி, சுகாதார அமைச்சின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அந்தப் பதவியில் இதுவரை காலமும் விசேட மருத்துவர் பாலித மஹிபால கடமையாற்றியிருந்தார். (எ-இ)



## படகுச்சேவை நிறுத்தம்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக குறிகாட்டுவான்-நெடுந்தீவு இடையேயான படகுச் சேவைகள் நேற்று திங்கட்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல் வரை இடம்பெறமாட்டாது என நெடுந்தீவு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (எ-ரி-9-66-555)

**நாளை**

27.11.2024

புதன்கிழமை - கார்த்திகை - 12

சுபநேரம் : 04.42 - 06.12

ராகுகாலம் : 12.12 -01.42

**நாளொரு நல்வார்த்தை**

பசிய காடுகள் இயற்கையின் படைப்பு
பாலைவனங்கள் மனிதனின் படைப்பு

-கவிஞன் இன்குலாப்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஒளிவிழா

யாழ்ப்பாணம்,நவ.26

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் ஒளிவிழா அதிபர் கே. தவகீஸ்வரன் தலைமையில் கடந்த புதன்கிழமை வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகள் பல இடம்பெற்றன. (ச-33-17)

# மன்னாரில் தொடர் மழையால் வெள்ளத்தில் மக்கள் தத்தளிப்பு

### 2045 குடும்பங்கள் வரை பாதிப்பு





**மன்னார், நவ.26**


**மன்னாரில் பெய்த தொடர் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்ததுடன், பல கிராமங்கள், வீதிகள் நீருக்குள் மூழ்கியுள்ளன.**

வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்துள்ளமையால் மக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர்.

மாந்தை மேற்கு, நானாட்டான், முருங்கன், உயிலங்குளம் போன்ற தாழ்ந்த பிரதேசங்களில் மழையால் வயல் நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளன.


மன்னாரில் 2045 குடும்பங்களைச் சேர்ந்த 7778 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 4 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. 70 குடும்பங்களைச் சேர்ந்த 307 பேர் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளார்கள். 27 குடும்பங்களைச் சேர்ந்த 94 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. அத்துடன் தொடர் மழை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோர் மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் 0232117117 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்கலாம். அதேவேளை பேசாலை, நடுக்குடா, மாந்தை மேற்குப் பகுதிகளில் வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களை வெட்டி நீரை கடலுக்குள் பாய்ச்ச நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் தங்கள் மீன்பிடி உபகரணங்களையும் பாதுகாப்பான இடங்களில் வைத்துக் கொள்ளும்படியும் மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ரி-25-60,213,56)



ஸ்ரீ சனாதன தர்மபீடத்தின் சார்பில் சண்டிலிப்பாய் பாரதி முன்பள்ளியில் பயிலும் 15 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஸ்ரீ சனாதன தர்மபீடத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் பிரம்மஸ்ரீ கமல கஜபர சர்மா, பிரம்மஸ்ரீ இ.ஜெயச்சந்திரசர்மா, பாடசாலை தலைமை ஆசிரியர், ஏனைய ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ச-33-63)



## சைக்கிள் ஓட்டப்போட்டி!

யாழ்ப்பாணம், நவ.26

யாழ். வடமராட்சி பருத்தித்துறை பிரதேசசபையால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப்போட்டி பருத்தித்துறை பிரதேசசபைச் செயலர் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டி பருத்தித்துறை மந்திகையில் அமைந்துள்ள பருத்தித்துறை பிரதேசசபை முன்றலிலிருந்து ஆரம்பமாகி வடமராட்சி கிழக்கு குடாரப்பில் நிறைவடைந்தது.

இதில் முதலிடத்தை கற்கோவளம் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த ரி.சிவகரனும், 2ஆம் இடத்தை நாகர்கோவில் தெற்கு தரவை சனசமூக நிலையத்தைச் சேர்ந்த கே.சிவகரனும், 3ஆம் இடத்தை தொண்டைமானாறு கலையரசி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த ப.டினோஜனும் பெற்றுக் கொண்டனர். (ச-45-27)

## யாழ்ப்பாணம் – பொலநறுவை நல்லிணக்க களப்பயணம்


யாழ்ப்பாணம், நவ.26

'பெயார் மேட்' மருத்துவ நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் - பொலநறுவை மாவட்டங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்காக, யாழ். மாவட்ட சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொலநறுவைக்கு இரு நாள் களப்பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் களப்பயணம் மாற்றுத்திறனாளிகள் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்கள் தரிசிப்புகள் மற்றும் அனுபவப் பகிர்வை உள்ளடக்கியதாக அமைந்தது. இந்தப் பயணத்தில் யாழ்.மாவட்ட பதில் செயலர், உதவி மாவட்டச் செயலாளர், மாவட்ட சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். (ச-22, 25-9,66)







## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உலருணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், நவ.26

வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் கல்லுண்டாய் குடியேற்றத்திட்ட ஜே/135, ஜே/136 ஆகிய கிராம அலுவலர் பகுதிகளைச் சேர்ந்த 59 குடும்பங்களுக்கு 2 இலட்சத்து 95 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உலருணவுப் பொருள்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் வழங்கிவைக்கப்பட்டன. இதன்போது யாழ்.கொட்டடி நமச்சிவாய வித்தியாலயத்தில் தரம் -7இல் கல்வி கற்கும் கல்லுண்டாய்ப் பகுதியைச் சேர்ந்த மாணவனுக்கு 45 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய துவிச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டது. (ச-33-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய மீனவர்களால் சொத்திழப்பு; அனலைதீவு மீனவர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.26
இந்திய மீனவர்களால் அனலைதீவு கடற்பரப்பில் கடற்றொழில் உபகரணங்கள் அழிக்கப்படுகின்றமை மற்றும் இழப்பீடுகள் ஏற்படுகின்றமை தொடர்பில் அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் என்பன இணைந்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளன.
இந்த முறைப்பாட்டை அனலை தீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஜோன் பொஸ்கோ, வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா ஆகியோர் அனலைதீவு மீனவர்கள் சார்பில் மேற்கொண்டுள்ளனர். (33-20)

## கீரிமலைக் கேணியில் நீராடுவதற்குத் தடை!

யாழ்ப்பாணம்,நவ.26
கீரிமலை தீர்த்தக் கேணியில் நீராடுவதற்கு வலி. வடக்குப் பிரதேசசபை தற்காலிகத் தடை விதித்துள்ளது. தற்போதைய காலநிலையின் காரணமாக கேணியில் அதிகளவு நீர் தேங்கியுள்ளது. அண்மையில் 4 பேர் கேணியில் நீராடும் பொழுது நீரில் தாழ்ந்து உயிர் தப்பியுள்ளனர்.
இது தொடர்பாக வலி.வடக்கு பிரதேச சபையின் செயலாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது கடந்த நாள்களில் நீராட முனைந்தவர்கள் மூழ்கித் தப்பிய நிலையையும், காலநிலையையும் கருத்திற் கொண்டு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதை மீறி நீராட முனைபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (எ-33-125)

## திமிங்கில வாந்தியுடன் இரு இளைஞர்கள் கைது

அநுராதபுரம், நவ.26
8 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க திமிங்கல வாந்தியை (அம்பர்) சட்டவிரோதமாக வைத்திருந்திருந்த குற்றச்சாட்டில், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அநுராதபுரத்தில் வைத்து நொச்சியாகம பொலிஸாரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
தங்காலைப் பிரதேசத்தில் வசிக்கும் 36 வயதுடைய நபரும், கொக்காவெவ, கலென்பிந்துனுவெவ பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடைய நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் நொச்சியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (எ-25)

## வலம்புரிச்சங்கை விற்க முயன்றவர் கைது

மாத்தறை, நவ.26
மாத்தறை, திஹகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அபரெக்க அதிவேக வீதிக்கு அருகில் அரிய வகை வலம்புரிச் சங்கு ஒன்றை ஒரு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.
மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் ஹங்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திஹகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-25)

## மீள அறிமுகப்படுத்தப்படும் தொழில் முன்னிலைப் பாடம்

கொழும்பு, நவ.26
தொழில் முன்னிலைப் பாடம் மீண்டும் பாடசாலைகளில் அறிமுகம் செய்யப்படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். தொழிற் கல்வி பிரதியமைச்சரின் பதவியேற்பு நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
பாடசாலைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறமுடியாத மாணவர்கள் வேறு தெரிவுகள் இல்லாத நிலையில் தொழிலை நாடிச்செல்லும் செயற்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். தொழிற்கல்வியும், உயர்கல்வியும் சமாந்தரமாகக் கொண்டு செல்லப்படவேண்டும். தொழிற்கல்வி ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தமுடியும் - என்றார். (எ-33-6)

## ஆணொருவர் சடலமாக மீட்பு



மாத்தளை, நவ.26
மாத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒவிலிகந்த பிரதேசத்தில் உள்ள வயலிலிருந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர். அதே பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் மாத்தளை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-25)

## மலைநாட்டு மரக்கறிகள் சடுதியாக விலை குறைப்பு

கொழும்பு, நவ. 26
பிரதான பொருளாதார மத்திய நிலையங்களில் ஒன்றான கெப்பட்டிபொலவில் மரக்கறிகளின் விலை குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாமல் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.
தற்போது, மரக்கறிகளின் விளைச்சல் அதிகரித்துள்ளதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். கரட், லீக்ஸ் உள்ளிட்ட மலைநாட்டு மரக்கறிகளின் விலைகளே குறைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-25)

## நல்லூரில் தாவரங்களை அடையாளம் காணும் போட்டி

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் நடத்தும் இயற்கையை நேசிக்கக் கற்றுத் தரும் தாவரங்களை அடையாளம் காணும் தாவராவதானி போட்டி நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.
போட்டியில் பால், வயது வேறுபாடின்றி பங்கேற்கலாம் எனவும், வெற்றியாளர்களுக்குச் சான்றிதழோடு பரிசில்களும் வழங்கப்படும் எனவும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர். (எ-ரி-66)



## பஸ்கள் மோதியதில் நால்வருக்குக் காயம்

நுவரெலியா, நவ.26
ஹட்டன் - கொழும்பு பிரதான வீதி வட்டவளைப் பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை நடந்த பஸ் விபத்தில் நான்கு பயணிகள் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கினிகத்தேனையிலிருந்து ஹட்டன் நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸும், ஹட்டனிலிருந்து கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் தனியார் பஸ்ஸின் பின்புறப் பகுதி கடுமையாகச் சேதமடைந்துள்ளது. காயமடைந்தவர்கள் வட்டவளைப் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து தொடர்பில் வட்டவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-25)


## கைவிரல் அடையாளத்தை வழங்க கால அவகாசம்

கொழும்பு, நவ.26
குவைத்தில் பணிபுரியும் பணியாளர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்கள் தங்களது கைவிரல் அடையாளத்தை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கவேண்டும் என அந்நாட்டின் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.
இதற்கான கால அவகாசம் கடந்த செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடைய இருந்த நிலையில், மீண்டும் அடுத்தமாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. குவைத்தில் பணிபுரியும் அனைத்து இலங்கைப் பணியாளர்களும் உரிய இடங்களில் தங்களின் கைவிரல் அடையாளத்தை வழங்கவேண்டுமென்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவுறுத்தியுள்ளது. (எ-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 04 . 1944



மறைவு 23 . 11 . 2024

## சந்திரசேகரம்பிள்ளை திலகேந்திரா

**(பிராந்திய கணக்காளர் இ.போ.சபை)**

யாழ். தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம்பிள்ளை திலகேந்திரா அவர்கள் 23-11-2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சந்திரசேகரம்பிள்ளை - முத்துரத்தினம் தம்பதியரின் ஏக புதல்வரும், காலஞ்சென்ற தம்பையா - சரச்சந்திராகாந்தி தம்பதியரின் அன்பு மருமகனும், அமிர்தகாந்திஅம்மாள் அவர்களின் பாசமிகு கணவரும், துஷ்யந்தன் (அவுஸ்திரேலியா), லக்ஷ்யாணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹேமா, திருப்பதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவதரன், தர்சிகா, தரணிகா (லண்டன்), பவித்திரன் (அவுஸ்திரேலியா), சந்தோஸ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேரனும், கோபால், இந்தி, அம்பி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**துஷ்யந்தன் - மகன் - +61 414 911 109**
**லக்ஷ்யாணி - மகள் - +44 783 768 3754**
**கோபால் - மைத்துனர் - +44 796 088 9339**

(CS/56765) J-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 05 . 1944



இறப்பு 24 . 11 . 2024

## திருமதி சிவராசா இராசம்மா


ஊரெல்லைத் தெரு, மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா இராசம்மா அவர்கள் நேற்றுமுன்தினம் (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும், செல்லையா - சின்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சிவராசா அவர்களின் அன்பு மனைவியும், குஞ்சுத்தம்பி (ஜேர்மனி), காலஞ்சென்ற கோபால கிருஸ்ணன், கயிலாயபதி, தங்கராணி, கணேசமூர்த்தி (ஜேர்மனி), கலாவதி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான யோகரத்தினம் , சுப்பிரமணியம் மற்றும் ஆனந்தராசா, ஞானமலர், சற்குணநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**
**076 214 1994**
**சகோதரி - 076 603 6359**

(CS/1931) J-1



## வெள்ளவாய்க்காலால் வீடுகளுக்கு ஆபத்து!

### தொண்டமான்நகர் மக்கள் ஆதங்கம்

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தொண்டமான்நகர் கிராம அலுவலர் பிரிவில் காணப்படுகின்ற வெள்ள வாய்க்காலால் பாய்ந்தோடும் வெள்ளம் காரணமாக பல வீடுகளுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

வாய்க்காலில் பெருக்கெடுக்கும் வெள்ளம் காரணமாக மண்ணரிப்பு ஏற்பட்டு அருகில் உள்ள பல வீடுகளின் அத்திவாரம் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு சில வீட்டு உரிமையாளர்கள் தங்களது வீடுகளைப் பாதுகாத்துக்கொள்ள மண்மூடைகளைத் தற்காலிகமாக அடுக்கி வைத்துள்ள போதும் பாதிப்பைத் தடுக்க முடியவில்லை என்றும் மலசல கூடங்கள்கூட வெள்ளத்தால் அரிக்கப்பட்டு இடிந்துவிழும் நிலையில் உள்ளன என்றும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர். வாய்க்காலின் குறிப்பிட்ட சிறிய பகுதி கட்டப்பட்டுள்ள போதும் ஏனையபகுதிகள் கட்டப்படாது இருப்பதால் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம், கரைச்சிப் பிரதேச சபை என்பன இந்த விடயத்தில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-33-214)

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 10 . 1963



மறைவு 24 . 11 . 2024

## சிவபாலரெட்ணம் அமுதா

யாழ்ப்பாணம் கச்சேரியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கச்சேரியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சிவபாலரெட்ணம் அமுதா அவர்கள் நேற்றுமுன்தினம் (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சிவராசா - நவநீதம் தம்பதியரின் அன்பு மருமகளும், சிவபாலரெட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சேனாதிராசா மற்றும் செல்வராணி, அரியமலர், செல்வராசா (கனடா), தங்கராசா காலஞ்சென்ற லலிதாதேவி மற்றும் சகுந்தலா, சௌந்தரராஜன் (கொலண்ட்), கிருஸ்ணகுமார் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற மகேஸ்வரி, சதாசிவம், மயில்வாகனம், ரவீந்திரன், சுசிலா மற்றும் சீனத், செல்வராசா, லதா, காலஞ்சென்ற கலா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல: 10 பாரதி வீதி,**
**கச்சேரி.**

**தகவல் :**
**கணவர் (சிவா)**

(CS/56762) J-1

**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை - புத்தூர்**

**முன்பள்ளிகளுக்கு மாணவர்களை இணைத்தல் - 2025**

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பின்வரும் முன்பள்ளிகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- அரிச்சுவடி முன்பள்ளி- ஆவரங்கால்
- கஜமுகன் முன்பள்ளி- அச்சுவேலி
- சிகரம் முன்பள்ளி- இருபாலை

**முன்பள்ளிகளில் கல்விகற்க அனுமதி பெறும் மாணவர்களுக்கு கீழ்வரும் வசதிகள் வழங்கப்படும்.**

- எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.
- தகைமை பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- இலவச சீருடை வழங்கப்படும்.
- இலவச சத்துணவுகள் வழங்கப்படும்
- நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கற்றல் வசதிகள் ( Smart Preschool).
- இலவச கல்விச் சுற்றுலா வசதிகள்
- வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப் படுகின்றது.

குறித்த முன்பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளை இணைத்துக் கொள்ள விரும்பும் பெற்றோர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தை வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் மற்றும் முன்பள்ளிகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை பூரணப்படுத்தி 24.12.2024 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த முன்பள்ளிகளிலோ அல்லது புத்தூர், அச்சுவேலி, கோப்பாய் உப அலுவலகங்களிலோ அல்லது புத்தூரில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலதிக தகவல்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

1. தலைமை அலுவலகம் - 021 205 8867
2. புத்தூர் உப அலுவலகம் - 021 205 8988
3. அச்சுவேலி உப அலுவலகம் - 021 205 8972
4. கோப்பாய் உப அலுவலகம் - 021 205 8974


**செயலாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்**

(CR/43768) J-1 **26.11.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்ரான்கானை விடுக்குமாறு ஆதரவாளர்கள் போராட்டம்!

## தடுக்க அதியுச்ச பாதுகாப்பு ஏற்பாடுகள்



இஸ்லாமாபாத், நவ.26
ஊழல் வழக்கில் பிணை பெற்ற பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், மீண்டும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விடுதலை செய்யக் கோரி வரும் அவரது ஆதரவாளர்கள், நாடளாவிய ரீதியில் போராட்டத்துக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

அதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக லாகூர், பெஷாவர் ஆகிய நகரங்களை தலைநகர் இஸ்லாமாபாத்துடன் இணைக்கும் நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன. தலைநகருக்குள் போராட்டக்காரர்கள் நுழைவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முக்கிய நகரங்களில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பஞ்சாப் மாகாணத்தில் 144 தடை உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டப்பிரிவின்படி பொதுமக்கள், நான்கு அல்லது அதற்கு அதிகமானோர், பொது இடத்தில் கூடுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. (ஏ-இ)

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தி இந்தியா மகத்தான வெற்றி!

மெல்பேர்ன், நவ.26
பேர்த் கிரிக்கெட் விளையாட்டரங்கில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது போர்டர் காவஸ்கர் மற்றும் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் கிரிக்கெட் போட்டியில் 295 ஓட்டங்களால் இந்தியா வெற்றி ஈட்டியுள்ளது. 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியா 1:0 என்ற ஆட்டக் கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இரண்டாவது இன்னிங்ஸில் ஜெய்ஸ்வால், விராட் கோஹ்லி, கே.எல். ராகுல் ஆகியோர் துடுப்பாட்டத்தில் வெளிப்படுத்திய திறமை, பும்ரா, மொஹம்மத் சிராஜ் ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சுகள் என்பன இந்தியாவை இலகுவாக வெற்றி கிட்டச் செய்துள்ளன.

நான்கு நாள்களில் நிறைவுபெற்ற முதல் ஆட்டத்தில் இரண்டு அணிகளும் முதல் இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறின. அவுஸ்திரேலியாவின் வேகப்பந்துவீச்சுகளில் இந்தியா 150 ஓட்டங்களைப் பெற்றதுடன் இந்தியர்களின் வேகப்பந்துவீச்சுகளில் அவுஸ்திரேலியா 104 ஓட்டங்களுக்குச் சுருண்டது.

முதல் இன்னிங்ஸ் நிறைவில் 46 ஓட்டங்களால் முன்னிலையில் இருந்த இந்தியா, இரண்டாவது இன்னிங்ஸில் மிகவும் அற்புதமாகத் துடுப்பெடுத்தாடி 6 விக்கெட்களை இழந்து 487 ஓட்டங்களைப் பெற்று துடுப்பாட்டத்தை நிறுத்திக்கொண்டது.

மிகவும் கடினமான 534 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா சகல விக்கெட்களையும் இழந்து 238 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.

போட்டியின் நான்காம் நாளான நேற்றுக் காலை 3 விக்கெட்கள் இழப்புக்கு 12 ஓட்டங்களிலிருந்து தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த அவுஸ்திரேலியா, மொத்த எண்ணிக்கை 79 ஓட்டங்களாக இருந்தபோது 5ஆவது விக்கெட்டை இழந்து தடுமாறியது. மத்திய வரிசை வீரர்களான ட்ரவிஸ் ஹெட் (89), மிச்செல் மார்ஷ் (47), அலெக்ஸ் கேரி (36) ஆகியோர் சற்று நிதானத்துடன் துடுப்பெடுத்தாடியதால் அவுஸ்திரேலியா 200 ஓட்டங்களுக்கு மேல் பெற்றது. ஆனால் அவர்களால் அவுஸ்திரேலியாவின் தோல்வியைத் தடுக்க முடியவில்லை. (ஏ-இ)

# எட்டாத உயரத்தில் மஸ்கின் சொத்து!

கொழும்பு, நவ.26
எலான் மஸ்கின் சொத்து மதிப்பு 334.3 பில்லியன் டொலராக உயர்ந்ததை அடுத்து, உலகிலேயே இதுவரை இல்லாத சொத்து மதிப்பைக் கொண்ட பெரும் பணக்காரர் என்ற புகழை அவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்புக்கு எலான் மஸ்க் ஆதரவு அளித்ததுடன், தேர்தலில் போட்டியிட நிதியுதவியும் வழங்கியிருந்தார். ஜனாதிபதி ட்ரம்ப் வெற்றி பெற்ற பிறகு எலான் மஸ்கின் சொத்து மதிப்பு சடுதியாக உயர்ந்துள்ளது. அமெரிக்கத் தேர்தல் முடிவு நாளில் மட்டும் எலான் மஸ்கின் சொத்து மதிப்பு பலமடங்கு அதிகரித்தது. அதற்கு டெஸ்லா நிறுவனத்தின் பங்குகளில் ஏற்பட்ட எழுச்சியே முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. (ஏ-இ)

# படகு விபத்தில் சிக்கி ஏதிலிகள் 24 பேர் சாவு

லண்டன், நவ.26
இந்தியப் பெருங்கடல் அருகே, இரு படகுகள் விபத்துக்குள்ளானதில் சோமாலியா நாட்டைச் சேர்ந்த 24 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கிழக்கு ஆபிரிக்க நாடான சோமாலியாவைச் சேர்ந்த பலர் பொருளாதார வாய்ப்புகளைத் தேடி ஐரோப்பாவுக்குள் நுழைய ஆபத்தான கடல்வழி பயணத்தை மேற்கொள்கின்றனர். இந்தப் பயணத்தின் போது விபத்துகள் ஏற்பட்டுப் பல உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. சோமாலியாவைச் சேர்ந்த 70 பேர், 2 படகுகளில் இந்தியப் பெருங்கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு ஆபத்தான பயணத்தை மேற்கொண்டுள்ளனர். அப்போது எதிர்பாராத விதமாக 2 படகுகளும் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 24 பேர் உயிரிழந்துள்ளனர். விபத்தில் சிக்கிய 46 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

## கனிஷ்ட சர்வதேச கிரிக்கெட் ஆட்டத்தில்

# பங்களாதேஷை சுருட்டிய ஹாட்லியின் ஆகாஷ்!



கொழும்பு, நவ.26
காலி சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட பங்களாதேஷ் அணிக்கு எதிரான கனிஷ்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி வீரர் விக்னேஸ்வரன் ஆகாஷ் 5 விக்கெட்களைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார். இந்தப் போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டதால் முடிவு கிட்டவில்லை.

கனிஷ்ட சர்வதேச போட்டியில் விளையாடிய முதலாவது சந்தர்ப்பத்திலேயே மிகத் திறமையாக பந்துவீசிய ஆகாஷ், எதிரணியின் நான்கு வீரர்களை நேரடியாக போல்ட் செய்ததுடன் மற்றைய வரை தனது பந்துவீச்சிலேயே பிடி எடுத்து ஆட்டம் இழக்கச் செய்தார். அவர் 7.5 பந்துப்பரிமாற்றங்களில் 27 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்களைக் கைப்பற்றி அசத்தியுள்ளார். இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட 17 வயதுக்குட்பட்ட பங்களாதேஷ் அணி 33.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல விக்கெட்களையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது.

பங்களாதேஷ் அணி 19ஆவது ஓவரில் விக்கெட் இழப்பின்றி 76 ஓட்டங்களைப் பெற்று பலமான நிலையில் இருந்தது. ஆரம்ப வீரர்களான மொஹமத்ரிதோய் ஹொசெய்ன் 40 ஓட்டங்களுடனும் அப்துல்லா அல் முஹி 31 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர்.

அப்போது தனது 3ஆவது ஓவரை வீசிக்கொண்டிருந்த விக்னேஸ்வரன் ஆகாஷ், ஆரம்ப வீரர்கள் இருவரினதும் விக்கெட்களை நேரடியாக பதம் பார்த்து ஆட்டம் இழக்கச் செய்தார்.

தொடர்ந்து தனது 5ஆவது பந்துப்பரிமாற்றத்தில் பங்களாதேஷ் அணித் தலைவர் ப்ஃஹான் சாதிக்கை தனது பந்துவீச்சிலேயே பிடி எடுத்து ஆகாஷ் ஆட்டம் இழக்கச்செய்தார். அவரது 6ஆவது பந்துப்பரிமாற்றத்தில் எதிரணி வீரர் ஒருவர் ரன் அவுட் ஆக்கப்பட்டார். தனது 8ஆவது பந்துப்பரிமாற்றத்தில் அடுத்தடுத்த பந்துகளில் கடைநிலை வீரர்கள் இருவரை நேரடியாக போல்ட் ஆக்கி ஆட்டம் இழக்கச்செய்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய 17 வயதுக்குட்பட்ட இலங்கை அணி 5.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 23 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழையால் ஆட்டம் கைவிடப்பட்டது. (ஏ-இ)

# இஸ்ரேலை இலக்குவைக்கும் லெபனான் ஏவுகணைகள்!

டெல் அவிவின், நவ.26
இஸ்ரேலை குறிவைத்து லெபனானில் இருந்து ஏவுகணை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அடுத்து அங்கு பதற்றம் அதிகரித்துள்ளது. ஆறு ஏவுகணைகள் நாட்டுக்குள் ஏவப்பட்டுள்ளன என்று இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

மத்திய இஸ்ரேலை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவற்றில் ஐந்து ஏவுகணைகள் இடைமறிக்கப்பட்டு அழிக்கப்பட்டன என்றும், ஒன்று தரையில் வெடித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏவுகணை தாக்குதலைத் தொடர்ந்து டெல் அவிவின் வடக்கே உள்ள நெதன்யா மற்றும் ஹெர்ஸ்லியாவிலும் பாதுகாப்பு எச்சரிக்கை ஒலிகள் எழுப்பப்பட்டன. அதே வேளை, பல ஆளில்லா விமானங்களும் இஸ்ரேலை இலக்குவைத்துத் தாக்கியுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆளில்லா விமான தாக்குதல் கலிலி பகுதியை இலக்கு வைத்து நடத்தப்பட்டுள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்போது மழையுடனான காலநிலை நீடிக்கும் நிலையில், பரந்தன் முல்லைத்தீவு வீதியில் சுண்டிக்குளம் சந்தியில் மரம் ஒன்று பாறி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தின் மீது வீழ்ந்துள்ளது. வாகனம் பகுதியளவில் சேதமடைந்ததுடன், மின் இணைப்புக்களும் சேதமடைந்தன. அந்தப் பகுதி இளைஞர்களும், பொலிஸாரும் இணைந்து மரத்தை வெட்டி அகற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். (எ-113)





# வவுனியாவில் மாவீரர் கௌரவிப்பு

வவுனியா, நவ.26

மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு வவுனியாவில் நேற்று முன்னெடுக்கப் பட்டது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஒழுங்கமைப்பில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நகரசபை வாயிலில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபிக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மாவீரர்களின் நினைவு சார்ந்த திருவுருவப் படம் அங்கிருந்து வாத்திய இசையுடன் எடுத்து வரப்பட்டு நகரசபை கலாசார மண்டபத்தில் வைக்கப்பட்டது.

அங்கு பிரதான ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, மாவீரர்களுக்கான அகவணக்கத்தை தொடர்ந்து அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கும், மாவீரர்களின் நினைவு சார்ந்த பொது படத்திற்கும் மலர் தூபி, மாலை அணிவித்து தீபமேற்றி மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

நினைவு உரைகள், நடன நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டு, மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பெருமளவான மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவுகள் கலந்துகொண்டனர். (எ-110-18)



# ஆலோசனைகள் முன்வைக்கலாம்

யாழ்ப்பாணம், நவ. 26

நகர அபிவிருத்தி அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கான அபிவிருத்தித் திட்டம் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பெற்று கொள்ளும் முகமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திலும் சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரம் ஆகிய பொதுநூலகங்களிலும் அபிவிருத்தித் திட்டம் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சபையின் இணையத் தளத்திலும், முகநூல் பக்கத்திலும் அபிவிருத்தித் திட்டம் மென்பிரதியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே ஆலோசனைகளை முன்வைக்க விரும்புபவர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் தமது தகவல்களை எழுத்துமூலம் தெரியப்படுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-125)

# வயாவிளான் மத்திய கல்லூரி சாதனை

யாழ்ப்பாணம், நவ.26

அகில இலங்கை கர்நாடக சங்கீதப்போட்டி வீணை வாசித்தலில் வயாவிளான் மத்திய கல்லூரி மாணவி ஸ்ரீபவனுயா பவானந்த சர்மா தேசியரீதியில் முதலாமிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (ச-45-10)

# சுப்பர்மடத்தில் நேற்று மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், நவ.26


பருத்தித்துறை சுப்பர்மடத்தில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

சுப்பர்மடம் பொதுநோக்கு மண்டபத்தில் விசேடமாக ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு மாவீரர் வாரம் உணர்வு பூர்வமான முறையில் கடந்த 21 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதன் ஒரு பகுதியாக மாவீரர் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் மதிப்பளிப்பு நிகழ்வு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

சுப்பர்மடம் முனியப்பர் ஆலயத்தில் இருந்து மங்கல வாத்திய இசையுடன் மாவீரர் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் பொதுநோக்கு மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டு அக வணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. மாவீரர் பெற்றோரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு ஈகச்சுடர்களும் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவீரர் நாள் சிறப்பு உரைகளும், சிறுவர்களின் நடனம், கவிதை வாசிக்கும் நிகழ்வுகள் இடம்பெற்று மாவீரர் பெற்றோருக்கு வேட்டி, சேலை, மாவீரர்களின் நினைவுப் படம் என்பன வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. (ம-110)

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21 • 11 • 1947



மறைவு
19 • 11 • 2022

அமரர் **ஆறுமுகம் பேரின்பநாயகம்** (குணம்)

திதி: கார்த்திகைமாத தேய்பிறை ஏகாதசி

ஈராண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள்
உம்மை காலமெல்லாம் நினைத்திருப்போம்
பேரின்பத்தை எமக்களித்து
எங்கள் நாயகமாய்த் திகழ்ந்தீர்கள்
தேனினிய உங்கள் குணம்
தேடி நாம் உருகுகிறோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்
மனைவி மற்றும் பிள்ளைகள்

(CS/1932) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தரப்...

இம்முறை உயர்தரப் பரீட்சையில் நாடளாவிய ரீதியில் மூன்று இலட்சத்து 33 ஆயிரத்து 185 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். அவர்களில் 2 லட்சத்து 53 ஆயிரத்து 390 பாடசாலை பரீட்சார்த்திகளும் 79 ஆயிரத்து 793 தனியார் பரீட்சார்த்திகளும் அடங்குகின்றனர். (அ-ம-110)

## வெள்ளப் பேரிடரில்...

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவில் பெய்த தொடர் மழை காரணமாக பல இடங்களில் வெள்ளப் பேரிடர் ஏற்பட்டுள்ளது. நந்திக்கடல் நிரம்பியதைத் தொடர்ந்து வட்டுவாகல் பாலம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் அந்தப் பாலத்தின் ஊடாகப் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. மிகுந்த சிரமத்துக்கும் ஆபத்துக்கும் மத்தியிலேயே மக்கள் போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் சிறு குளங்கள் பலவும் உடைப்பெடுத்துள்ளன. நூற்றுக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து இடைக்காலத் தங்குமிடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்களுக்கு சமைத்த உணவுகளையும் உலருணவுகளையும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வவுனியா**

வவுனியாவிலும் தொடர் மழையின் தாக்கம் வெள்ளப் பேரிடர் நிலையைத் தோற்றுவித்துள்ளது. வவுனியா - செட்டிகுளம் பிரதேசத்தில் அமைந்துள்ள ராமயன்குளம் உடைப்பெடுக்கும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மடத்துவிளாங்குளம் அணைக்கட்டும் ஆபத்தான நிலையில் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதையடுத்து குளங்கள் உடைப்பெடுப்பதில் இருந்து பாதுகாப்பதற்காகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**மன்னார்**

வெள்ளப் பேரிடர் நிலையால் மன்னாரில் 15 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டு அங்கு இரண்டாயிரத்துக்கும் அதிகமானவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சமைத்த உணவுகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வெள்ளப் பேரிடர் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மன்னார் மீனவர்களை மறு அறிவித்தல் வரும் வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று மாவட்டச் செயலர் கனகேஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை - வெள்ளத்தில் மூழ்கியுள்ள வசந்தபுரம் கிராம மக்கள் தங்கள் கிராமத்திலிருந்து வெள்ளநீர் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் தங்களுக்கு மிகத்துரிதமாக உதவிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் சீரற்ற வானிலையால் 493 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பாரதிபுரம், தொண்டமான்நகர், மாவடியம்மன், கனகபுரம், கண்ணகிபுரம், இராமநாதபுரம், திருநகர், கனகாம்பிகைக்குளம், திருவையாறு, ஜெயந்திநகர் பகுதிகளிலேயே இவ்வாறு கூடுதலான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

(அ-ம-26-125-110-66-60-56)

## வெள்ளப்...

416 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதி பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் வெள்ள இடரால் இதுவரை 288 குடும்பங்களைச் சேர்ந்த 945 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 10 வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் 215 குடும்பங்களைச் சேர்ந்த 901 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 8 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தம் மற்றும் இடி, மின்னல் தாக்கத்தால் 29 குடும்பங்களைச் சேர்ந்த 93 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடொன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 574 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 341 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடு முழுமையாகவும், ஒரு வீடு பகுதியளவிலும் சேதமடைந்துள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 141 குடும்பங்களைச் சேர்ந்த 508 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 266 குடும்பங்களைச் சேர்ந்த 932 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 73 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 470 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 520 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 4 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது. (அ-ம-26)

## புயல்...

பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றமுத்தத் தாழ்வுமையம் நகரும் வேகம் மிகவும் மந்தமாகக் காணப்படுகின்றது.

இன்று காலை 8 மணியளவில் பானமயிலிருந்து 140 கிலோமீற்றர் தொலைவில் காணப்படும் புயல் மாலை 3 மணியளவில் அம்பாறைக்கு மிக அண்மித்து 82 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொள்ளும்.

இந்த ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் நாளை அதிகாலை 2 மணியளவில் மட்டக்களப்பு நகரில் இருந்து 91 கிலோமீற்றரில் காணப்படும். அதன் பின்னர் நண்பகல் ஒரு மணியளவில் திருகோணமலையில் இருந்து 94 கிலோமீற்றர் தூரத்தில் காணப்படும். நாளை மாலை 6 மணியளவில் முல்லைத்தீவில் இருந்து 109 கிலோமீற்றர் தூரத்தில் இந்தப் புயல் நிலைகொள்ளும். தற்போதைய நகரும் வேகத்தில் தான் இந்த இட அமைவுகள் குறிப்பிடப்படுகின்றன. நகரும் வேகம் மாற்றமடைந்தால் இடங்களும் மாறும் - என்றார். (அ-ம-10)

## ஒன்றிணைய...

தொடர்பிலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறாதொரு நிலையிலேயே, ஐக்கிய மக்கள் சக்தியைக் கைவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய வேண்டுமாயின் தலைமைப் பதவி சஜித்துக்கு வழங்கப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து பயணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம். இரு அணிகளும் இணைந்திருந்த தரப்புகள்தான். ஆனால் எம்மிடம் சில நிபந்தனைகள் உள்ளன. இந்தியா சென்றுள்ள ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர், இது தொடர்பில் அவருடன் பேச்சு நடத்தப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண கூறியுள்ளார்.

இதேவேளை - ஐக்கிய தேசியக் கட்சியுடன்தான் எமது பயணம். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ள ஏனைய தரப்புகளுடன் அல்ல எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## விலகினார்...

விலகுவதாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கு.திலீபன் அறிவித்துள்ளார்.

"2013ஆம் ஆண்டிலிருந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) உடன் இணைந்து கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாகச் செயலாளராக பொறுப்பேற்று மக்கள் பணியாற்றினேன். 2020ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராகவும் தெரிவாகினேன். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு கணிசமான வாக்குகள் கிடைத்தன. இதுவரை காலமும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் பயணித்து மக்கள் சேவையாற்றினேன். சில விடயங்கள் காரணமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் இருந்து விலகுகிறேன். கட்சியில் இருந்து நான் வெளியேறுவதற்கு, கட்சியோ அல்லது கட்சியின் தலைமையோ காரணமில்லை, அது எனது தனிப்பட்ட முடிவு" என்று அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-110)

## பெண்ணொருவரிடம்...

மோசடி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

மோசடியாளர்களின் உரையாடலை நம்பிய அந்தப் பெண், தனது வங்கிக் கணக்குத் தொடர்பான விடயங்களை அவர்களிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்து ஓ.ரி.பி. எனப்படும் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தும் கடவுச்சொல்லையும் நம்பிக்கையின் அடிப்படையில் அந்தப் பெண் கொடுத்துள்ளார். இதன் பின்னரேயே அந்தப் பெண்ணின் வங்கிக் கணக்கில் இருந்து 10 இலட்சம் ரூபா வரை மோசடி செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பெண்ணின் தரப்பால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-10)

## புயலின்...

நிலை கொண்டால் தன்னை வீரியப்படுத்துகின்றது என அர்த்தம். எனவே தற்போது புயல் நகரும் வேகத்தை தாமதப்படுத்தினால் அதனால் ஏற்படும் ஆபத்து அதிகமாக இருக்கும். இதனால் வடக்கு - கிழக்குக்குக் கூடுதலான மழைவீழ்ச்சி கிடைக்கும். எனவே பொதுமக்கள் உரிய முன்னேற்பாடுகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் எதற்கும் தயார் நிலையில் இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றனர் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (அ-ம-10)

## புலிகளின்...

லிங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதேவேளை - கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினத்தன்று புலனாய்வாளர்களும், பொலிஸாரும் பாதுகாப்புக் கெடுபிடிகளில் தீவிரமாக ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-100-26)

## அச்சுவேலியில்...

மற்றும் 8 லட்சம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவபரிபாலனசபையின் ஆறுமுகநாவலர் பெருவிழா



யாழ்ப்பாணம், நவ. 26

சைவபரிபாலனசபை நடத்திய சைவத்தின் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருவிழா கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள சைவபரிபாலனசபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவபரிபாலன சபையின் உப தலைவர் பி.என்.சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ராஜசீலன் ஜமுனா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் சயனொளிபவன் முகுந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் சைவபரிபாலன சபை முன்றலில் அமைந்துள்ள நாவலரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து நாவலர் குருபூசையும் ஆராதனையும் நடைபெற்றன. நிகழ்வில் இளஞ் சைவப்புலவர் க.நித்தியபாபுதரன் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். தொடர்ந்து இந்து சாதனம் இதழைப் பிரதம விருந்தினர் வெளியிட்டு வைக்கச் சைவபரிபாலன சபையின் தலைவர் உ.தயானந்தன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்குச் சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப் பட்டன.

அத்துடன் நாவலர் தினத்தையொட்டி சைவபரிபாலன சபை பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்திய பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு இடம்பெற்றதுடன் அறநெறிப் பாடசாலை மாணவிகளின் நடன அரங்கு நிகழ்வு களும் இடம்பெற்றன. (ச-66)

**காணி விற்பனைக்கு உண்டு**

நெடுங்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் சுற்றிவர மதில் அமைக்கப்பட்ட 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CS/56759) J-1

**076 993 4992**

**A/L வரலாறு**

யாழ் முதல்நிலை வரலாற்றாசிரியர்,

M.பத்மன்

[B.A(Hons)History, P.G.D.E, Dip.in. psy, M.A(Hons)History, M.E.D(OUSL)]

➡ 2K26, 2K25றுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

➡ விடுமுறைக்கால விசேட வகுப்புக்களும் இடம்பெறுகின்றன.

கற்பிக்கும் இடங்கள் :

D.M.I ஆரியகுளம், யாழ்.நகர்

BITSMANS மானிப்பாய்

High College குளப்பிட்டி, கொக்குவில்

T. P : 0774825587

**Vacancy**

- Store Assistant - Male
- Working Location : Colombo
- Experience : 3 years
- Qualification : A/L
- info@suganth.lk

(CS/56764) J-1

**T.P : 076 620 2313**

**விற்பனைக்கு உண்டு**

நெடுங்குளம் சந்திக்கு அருகாமையில் 65 அடி அகலமும் 12 அடி உயரமும் கொண்ட நல்ல நிலைமையில் உள்ள அலுமினிய பிற்றிங் மற்றும் 12 அடி அகலம் 10 அடி உயரம் கொண்ட சுருக்குக் கதவும் விற்பனைக்கு உண்டு.

(CS/56760) J-1

**076 993 4992**

**காணி விற்பனைக்கு உண்டு**

அரியாலை நெடுங்குளம் சந்திக்கு அருகாமையில் A9 வீதியிலிருந்து 300m க்குள் மாடி வீடு கட்ட அனுமதி எடுக்கப்பட்டு கீழ்தளம் மட்டும் கட்டி முடிக்கப்பட்ட 39 அடி நீளம், 29 அடி அகலம் கொண்ட முழுவதும் பிளாட் பண்ணிய வீட்டுடன் 1 பரப்பு, 1 குளி காணி விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

(CS/56761) J-1

**074 126 0482, 074 177 1588**



# மாவீரர் நினைவாலயத்தில் சரவணபவன் அஞ்சலி

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், அவருடைய மனைவி யசோதை சரவணபவன் ஆகியோர், மாவீரர்களை அஞ்சலிக்கும் விதமாகவும், மாவீரர்களின் தியாகங்களை ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்குக் கடத்தும் விதமாகவும் மாவீரர்களின் பெயர்கள் மற்றும் இன்னும் சில முக்கியமான விடயங்களை ஆவணப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள 'மாவீரர் நினைவாலயத்தில்' நேற்று மாலை அஞ்சலி செலுத்தினர். (ம-125)

# நூல் வெளியீடும் விருது நிகழ்வும்



கிளிநொச்சி,நவ.26

லிட்டில் டெக் அக்கடமியின் முன்னாள் பணிப்பாளரும் சமூக ஆளுமையாளருமான அமரர் வ.சிவஜோதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு லிட்டில் டெக் அக்கடமியின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடைபெறும் ஞாபகார்த்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி திருநகர் கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தில் இடம்பெற்றது.

விருந்தினர்களாக சிரேஷ்ட சட்டத்தரணி சோ.தேவராஜா, சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளர் மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட ஆளுமைகளை ஆவணப்படுத்திய 'யார் எவர் கிளிநொச்சி தொகுதி 2' என்ற நூல் வெளியிடப்பட்டது. இந்த நூலை சிவஜோதியின் தந்தை சி.வயித்தீஸ்வரன் வெளியிட்டு வைத்தார்.

தொடர்ந்து இவ்வாண்டு விருதுக்குரிய மையப்பொருளாக 'தேசிய நல்லிணக்கம்' தேர்வு செய்யப்பட்டது. இந்த அடிப்படையில் 2024 க்கான சிவஜோதி ஞாபகார்த்த விருதும், அதனுடன் கூடிய தான ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும் வணக்கத்துக்குரிய மாத்தளை சுனேத்த தேரருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. (ச-33-214)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.